சுருக்கம்

பணியமைப்பு – பொதுப்பணித்துறை – தமிழ்நாடு அமைச்சுப் பணி– கருணை அடிப்படையில் பணி நியமனம்– திரு இரா.வ.அருண்குமார், த/பெ.காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு இரா.வரதராஜன் – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணி (பி1) துறை

அரசாணை (3ப) எண்.77

நாள் :22.10.2020
சார்வரி, ஐப்பசி 06.
திருவள்ளுவர் ஆண்டு 2051

படிக்கப்பட்டன:

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த(எம்)த்துறை, நாள் 01.08.2018.
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(க்யூ.1)த்துறை, நாள் 23.01.2020.
3. தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, மதுரை மண்டலம் அவர்களின் கடிதம் எண். அ2/11081/2019 (1803), நாள் 24.02.2020 மற்றும் 17.09.2020.

------

ஆணை:–

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், சிவகங்கை, கீழ்வைகை வடிநில வட்டத்தின் கட்டுப்பாட்டிலிருந்த, மானாமதுரை, கீழ்வைகை சிறப்புக் கோட்டத்தில் இளம்பொறியாளராகப் பணிபுரிந்து வந்த திரு இரா.வரதராஜன், கடந்த 01.02.2007 அன்று காலமானதையடுத்து, அவரது வாரிசுதாரர்/ மகன் திரு இரா.வ.அருண்குமார் தனக்கு கருணை அடிப்படையில் பணி வழங்க கோரி 16.02.2009 நாளிட்ட கடிதத்தில் கேட்டுக் கொண்டதின் பேரில், முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை அவர்களால் பொதுப்பணித் துறையில் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக திரு இரா.வ.அருண்குமார் என்பவருக்குப் பணி நியமனம் அளிக்கப்பட்டு, மதுரை மண்டல அலுவலகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள மதுரை, பெரியாறு வைகை வடிநில வட்டத்தின் கீழ் இயங்கும் மதுரை, பெரியாறு வைகை வடிநில கோட்ட அலுவலகத்தில் 29.08.2018 முற்பகல் முதல் பணியாற்றி வருகிறார் என்றும், தனியரின் பிறந்த நாள் 25.01.1991 என்றும், இடைநிலைக் கல்வி பள்ளி இறுதி வகுப்பினை மார்ச் 2006–இல் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும் தெரிவித்து, பணிவரன்முறைக்குத் தேவைப்படுகின்ற சான்றாவணங்களை அனுப்பி வைத்து, தனியரின் பணியினை அவர் பணியேற்ற நாளான 29.08.2018 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து அரசாணை வழங்குமாறு தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, மதுரை மண்டலம் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்றவரின் பணியினை வரன்முறை செய்ய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்படுவதாக ஆணையிடப்பட்டுள்ளது.

3. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குவது தொடர்பாக ஒருங்கிணைந்த வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

4. தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, மதுரை மண்டலம் அவர்களின் கருத்துருவினை அரசு நன்கு கூர்ந்தாய்வு செய்தது. ஆய்வுக்குப்பின், திரு இரா.வ.அருண்குமார், இளநிலை உதவியாளர், தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை நிர்ணயம் செய்துள்ள கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்குரிய அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்துள்ள நிலையில், அவரது பணியினை அவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில், பொதுப்பணித் துறையில், கருணை அடிப்படையில், பணியமர்த்தப்பட்ட நாளான 29.08.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில், பணி நியமனத்திற்குரிய உடற்தகுதியைப் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன் நாளிட்டு பணிவரன்முறை செய்வதால், ஊதிய உயர்வு/ ஊதிய நிலுவை ஏதும் இருப்பின் தனியர் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

5. இவ்வாணை தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை அ.சா.எண் 15197/ ட்டி.1/2020, நாள் 13.10.2020 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அ.சா. எண் 26136/ஜி1/2020, நாள்19.10.2020–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.மணிவாசன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
✓ தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, மதுரை மண்டலம், மதுரை–2.
திரு இரா.வ.அருண்குமார், இளநிலை உதவியாளர்(தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, மதுரை மண்டலம், மதுரை –2 வழியாக)
முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித் துறை, சென்னை–5.
மாநில கணக்காயர், சென்னை –18.

<u>நகல்:</u>
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை/ பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறை, சென்னை– 9.
இருப்பு கோப்பு / உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்